சிங்கப்பூர்

# நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு $275 மில்லியன் நிதி

வாசிப்புநேரம் - 1 நிமிடம்




வெளியீடு : 15 Apr 2025 08:50AM

Aa

(படம்: Facebook/Nanyang Technological University, Singapore)

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு 275 மில்லியன் வெள்ளி நிதி வழங்கப்பட்டுள்ளது.

Wee அறநிறுவனம், UOB வங்கி அளித்த 110 மில்லியன் வெள்ளி நன்கொடைக்கு வெள்ளிக்கு வெள்ளி நன்கொடையை அரசாங்கம் வழங்கியது.

அதனைக் கொண்டு நிதியுதவி தேவைப்படும் இளநிலை மாணவர்களுக்கு ஆதரவு வழங்கப்படும்.

சுமார் 1200 மாணவர்கள் பயனடைவர்.

தேவையுள்ள சுமார் 1500 பிள்ளைகளுக்குத் துணைப்பாடம், வழிகாட்டுதல் ஆகியவை கற்றுத் தரப்படும்.

புதிய பாடத்திட்டம் ஒன்றின் கீழ், செயற்கை நுண்ணறிவு, நீடித்த நிலைத்தன்மை ஆகியவற்றைச் சுற்றி புதிய யோசனைகளை உருவாக்க சுமார் 300 மாணவர்களுக்கு ஆரம்ப நிதியுதவி கிடைக்கும்.

சமூகத்திற்குத் திருப்பிக் கொடுக்கும் பண்பை வளர்க்க முயற்சிகள் உதவும் என்று நம்பப்படுகிறது.

https://seithi.mediacorp.sg/singapore/275-million-has-been-given-nanyang-technological-university-788786